1993 டிசம்பர் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகள் மூலம் இந்தத் திட்டத்திற்கு ஏதாவது குந்தகம் வருகிற மாதிரிக் கேள்விகளைக் கேட்டுக் கொண்டே போகக் கூடாது. இதனை நன்றாகச் செயல்படுத்துவதற்குரிய கேள்விகளாக இருக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில இடங்களில் சில நேரங்களில் என்று அவர்களே சொல்லி விட்டார்கள். எனவே, இப்படிப்பட்ட இந்த சமுதாயத்திலே இவ்வளவு பெரிய ஜனத் தொகையிலே, இவ்வளவு பேர் பணியாற்றிக் கொண்டிருக்கிறபோது, எங்கேயாவது ஒன்றிரண்டு பேர் இந்தத் தவறுகளைச் செய்தால், அதனை எங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிற போது, நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம். ஆனால், அவர் சொன்னதிலேயிருந்து என்ன தெரிகிறது என்று சொன்னால், 90 வயதிலே கூட தமிழகத்திலே இருக்கிறவர்கள் திடகாத்திரமாக இருக்கிறார்கள் என்பதை நிரூபிக்கிறவகையிலே தான் அவர் கேட்ட கேள்வி இருக்கிறது. எனினும், இப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல், நடவடிக்கை எடுப்பதற்காக மிகப் பெரிய அளவிலே இந்தத் துறை கண்காணிப்பாக அதனைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. மற்ற இடங்களிலேயிருந்து வந்து பார்க்கக்கூடிய அதிகாரிகள், மத்திய அரசு அதிகாரிகள் கூட, குடும்பக் கட்டுப்பாட்டைப் பொறுத்தவரை, இந்தத் துறை மிகச் சிறப்பாக மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக செய்து கொண்டிருக்கிறது; கிடைக்கிற பணம் முறையாக அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது; நியாயமானவர்களுக்குச் செய்யப்படுகிறது என்பதை ஏற்றுக் கொண்டு போயிருக்கிறார்கள். எங்கேயாவது ஒன்றிரண்டு தவறுகள் இருக்கலாம். அதுவும் 90 வயது என்பதெல்லாம் இருக்க முடியாது. அதாவது, 45, 50 வயதுக்கு மேலே இருப்பவர்களைக் கொண்டு வந்து, அப்படி செய்திருக்கக் கூடும். அப்படி இருந்தால், அது தவறு; அதன் மீது நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 86,6 டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர்.

86—

சங்ககிரி ஒன்றிய நெசவாளர்களுக்கு தறிக்கூடங்களுடன் வீடு கட்டிக் கொடுத்தல்

*20029—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1993 டிசம்பர் 30

(அ) மல்லசமுத்திரம், சங்ககிரி ஆகிய ஒன்றியங்களில் தறிக்கூடங்களுடன் கூடிய நெசவாளர்கள் வீடுகள் கட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்பொழுது இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் துறைக்கு அடுத்தபடியாக அதிகமான அளவில் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதில், குடிசைத் தொழில் பெரும் பங்கு ஆற்றி வருகிறது. நெசவாளர் பெருங்குடி மக்களின் நலனைக் கருதி, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் நல்ல பல திட்டங்களைத் தீட்டியுள்ள இந்த வேளையில், மல்லசமுத்திரம் ஒன்றியம் மாமுண்டியிலும், சங்ககிரி ஒன்றியம் அக்கம்மாப்பேட்டையிலும் நடப்பு ஆண்டில் தறிகளுடன் கூடிய வீடுகள் கட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லசமுத்திரம் மற்றும் சங்ககிரி ஆகிய ஒன்றியங்களில் 16 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அவைகளில் ஒன்றான தியாகி குமரன் நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு 60 வீடுகள் 1986–87 ஆம் ஆண்டில் கட்டித் தரப்பட்டு விட்டன. அதே போன்று, காளிப்பட்டி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக 61 பேருக்கு வீடுகள் 1991 ஆம் ஆண்டு கட்டித் தரப்பட்டு விட்டன. ஆதலால் அவர்கள் நிலத்தைக் கையகப்படுத்தி சங்கங்களில் பதிவு செய்வார்களேயானால், நிதி நிலைக்கேற்றவாறு அது ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எலச்சிப்பாளையம் ஒன்றியம் எடப்பாளையத்தில் சுமார் மூவாயிரத்திற்கும் அதிகமான நெசவாளர்கள் இருக்கும் அப்பகுதியில், மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரு[illegible]மாண்டில், இதைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1993 டிசம்பர் 30]

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தைக் கையகப்படுத்தி, கூட்டுறவுச் சங்கங்களில் ஒப்படைப்பார்களேயானால், நிதிநிலைக்கேற்பவாறு அது ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 87, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

87—

முத்துப்பேட்டையிலிருந்து வேளாங்கண்ணி வரை உள்ள சாலையை அகலப்படுத்துதல்.

*14015—திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம்— காயிதேமில்லத் மாவட்டம், முத்துப்பேட்டையில், இருந்து வேளாங்கண்ணி வரை உள்ள குறுகிய தார்ச்சாலையை அகலப்படுத்துவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை-காயிதேமில்லத் மாவட்டம் துவக்கப்பட்ட பின்னர், அது மாவட்ட தலைநகரமாக இருக்கிறது. அந்த மாவட்டத்தினுடைய தலைநகரச் சாலை மிகவும் பழுதடைந்த நிலையிலும், போக்குவரத்துக்கு லாயக்கற்ற முறையிலும் தொடர்ச்சியாக இருந்து கொண்டிருக்கிறது. அந்த மாவட்டத்திற்கு, முன்புகூட புதிய சாலைகள் தனியார் மூலமாகப் போடப்படுமென்றெல்லாம் அரசுக் குறிப்பிலே அறிவிக்கப்பட்டிருந்தது. இன்றைக்கு அதற்கான செய்திக்குறிப்பு இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். ஆகையால் உடனடியாக அந்தச் சாலைகளைப் போடுவதற்கு அரசு மீண்டும் முயற்சி எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.